**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 106/2020**
**நாள் 08/09/2025 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜெயசந்திரன் | த/பெயர் – சேஷமநாயுடு |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. ஜெயலட்சுமி என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் என் மனைவி ஆவார். அஜித்குமார் கோத்தி என்பவருக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் ஜெயலட்சுமி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். ஜெயலட்சுமி படித்துள்ளாரா என்றால் அவரும் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நான் கடன்வாங்கியிருந்தேன். அந்த பணத்தை திருப்பி செலுத்திவிட்டேன் அதனால் என்னுடைய ஆவணங்களை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

2. யார் சொல்லி மேற்படி பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

நான் வாங்கிய கடனுக்காக ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்தேன் என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் கடன்வாங்கியதாக பொய்யாக கூறுகிறேன் என்றும் அவரிடம் கிரையத்திற்காக தான் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல.

**வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை ஓத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**